# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை – 2020

**பாடம்:- குடியியற்கல்வி**

சுட்டெண்:......................  **தரம் – 10**  **நேரம் : 02 மணி**

## பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01. மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. தற்காலத்தில் உலகின் பல்வேறு நாடுகள் கொண்டுள்ள ஆட்சி முறை
    1. மன்னராட்சி முறை  2. சனநாயக ஆட்சி முறை
    3. சர்வாதிகார ஆட்சிமுறை  4. சோசலிச ஆட்சிமுறை

02. சனநாயகம் என்பதன் பொருள் பின்வருவனவற்றுள் எது?
    1. சர்வாதிகார ஆட்சி  2. இராணுவ ஆட்சி
    3. பிரபுத்துவ ஆட்சி  4. மக்களாட்சி

03. கிரேக்கத்தின் எதேன்சில் காணப்பட்ட சனநாயக முறை
    1. பிரதிநிதித்துவ சனநாயக ஆட்சி  2. சிறுகுழுவாட்சி
    3. நேரடி சனநாயக ஆட்சி  4. சோசலிச ஆட்சி முறை

04. ஆங்கிலப் புரட்சி நடைபெற்ற ஆண்டு
    1. கி.பி.1776  2. கி.பி. 1688  3. கி.பி.1789  4. கி.பி.1948

05. ஒரு கட்சி முறையைக் கொண்டிராத நாடு பின்வருவனவற்றுள் யாது?
    1. சீனா  2. கியூபா  3. பெரியபிரித்தானியா  4. வடகொரியா

06. இலங்கையில் காணப்படும் தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை
    1. 22  2. 23  3. 25  4. 28

07. வன்னித் தேர்தல் மாவட்டத்தில் உள்ளடங்காத மாவட்டம்
    1. முல்லைத்தீவு  2. கிளிநொச்சி  3. வவுனியா  4. மன்னார்.

08. "வெளித்தடைகளந்த விதத்தில் மனிதன் தனது தனித்துவத்தை விருத்தி செய்வதற்கான நிலைமை சுகந்திரமாகும்" எனக் கூறிய அறிஞர்?
    1. சீலர்  2. ரீ.எச்.கிறீன்  3. ஜீ.டி.எச்.கோல்  4. A.V.டைரி

09. ஒரு தேசிய அரசின் மூலக்கூறுகளாக அல்லாதது
    1. நிலம்  2. மக்கள் தொகை  3. அயல்நாட்டின் வளங்கள்  4. இறைமை

10. "ஒரு மத்திய அரசின் கீழ் அதிகாரங்கள் ஒன்று குவிக்கப்பட்ட அரசு" அழைக்கப்படுவதாவது
    1. கூட்டாட்சி  2. ஒற்றை ஆட்சி  3. சட்டவாட்சி  4. பிரபுத்துவ ஆட்சி



kalvi.lk

11. இலங்கைப் பாராளுமன்றத்திற்கு தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை

1. 105 2. 29 3. 220 4. 196

12. இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பு

1. டொனமூர் 2. சோல்பரி அரசியல் யாப்பு
3. 1972 முதலாம் குடியரசு யாப்பு 4. இரண்டாம் குடியரசு யாப்பு

13. ஒற்றையாட்சி நிலவும் நாட்டிற்கு உதாரணமுள்ள நாடு பின்வருவனவற்றுள் எது?

1. ஐக்கிய அமெரிக்கா 2. ஐக்கிய இராச்சியம் 3. கனடா 4. சுவிட்சர்லாந்து

14. மாநகர சபையின் பிரதானியாக விளங்குபவர்

1. தலைவர் 2. தவிசாளர் 3. நகரபிதா 4. மாநகர ஆணையாளர்

15. சுவிட்சர்லாந்தின் மாநில அரசுகள் சிறப்பித்துக் கூறப்படுவது

1. கென்ரன் 2. மாகாணம் 3. மாவட்டம் 4. குறுநிலம்

16. அரசின் தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் சனாதிபதியாகக் காணப்படும் அரசாங்க முறையாக அமைவது?

1. பாராளுமன்ற முறை 2. ஜனாதிபதி அரசாங்கமுறை
3. கலப்பு முறை 4. அணைத்தான்மை முறை

17. இலங்கையில் மத்தியரசுக்கும் மாகாண சபைக்கும் இணைப்பாளராகச் செயற்படுபவர்

1. முதலமைச்சர் 2. சபாநாயகர் 3. அமைச்சர்கள் 4. ஆளுநர்

18. அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் செனட்சபைக்கு எத்தனை பிரதிநிதிகள் வீதம் தெரிவு செய்யப்படுவர்.

1. 06 2. 10 3. 02 4. 15

19. இலங்கையில் அதிக மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம்

1. வடமத்திய மாகாணம் 2. வடமாகாணம் 3. தென் மாகாணம் 4. மேல்மாகாணம்

20. அநுராதபுரகாலத்தின் முதலாவது மன்னன்

1. மகாசேனன் 2. வசபமன்னன்
3. பண்டுகாபய மன்னன் 4. புத்ததாச மன்னன்.

(20X02= 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட எல்லாமாக 05 வினாக்களுக்கு விடை எழுதுக.**

**01.**

1. சனநாயகம் எனும் பதத்தில் அமைந்துள்ள சனநாயகம் குறித்து நிற்கும் பொருள் யாவை?
2. இருகட்சி முறை நிலவும் நாடுகளிற்கு உதாரணங்கள் 02 தருக.
3. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் உள்ளடங்கும் மாவட்டங்கள் இரண்டும் எவை?
4. அரசியல் யாப்பின் மூலம் மத்தியரசு மற்றும் பிரதேச நிர்வாக நிறுவனங்களுக்கிடையில் வழக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அரசுகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்.
5. சட்டசபையின் செயற்பாடுகள் 2 தருக?
6. தற்கால அரசுகளில் செயற்படுத்தப்படும் அரசாங்கமுறைகளை இரண்டாக வகைப்படுத்தலாம் அவை யாவை?
7. பாராளுமன்ற அரசாங்கமுறை கொண்டுள்ள இருவகையான நிர்வாகங்களும் யாவை?
8. ஐக்கிய அமெரிக்காவில் காணப்படும் மாநிலங்கள் எத்தனை?
9. சுவிட்சர்லாந்தில் பேசப்படுகின்ற மொழிகள் 2 தருக.
10. சமஷ்டி அரசொன்று வெற்றி பெறுவதற்கான இயல்புகள் 2 தருக.

(02X10= 20புள்ளிகள்)

**02.**

01. சனநாயகத்தைப் பற்றிக் கருத்து தெரிவித்துள்ள இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
02. தற்காலத்தில் நேரடி சனநாயக ஆட்சியினை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்கள் 3இனைக் குறிப்பிடுக.
03. அரசுகளில் நிலவும் பல்வேறுபட்ட தன்மைகளின் அடிப்படையில் கட்சிகளை வகைப்படுத்தி அவற்றில் ஒன்றினை விளக்கி உதாரணங்கள் தருக.

(02+3+5= 10புள்ளிகள்)

**03.**

01. தேர்தல் தொகுதிகள் மூலம் பிரதிநிதிகளை தெரிவு செய்வதன் நன்மைகள் 2 தருக.
02. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்புகள் மூன்றினைத் தருக.
03. சனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு எதிர்கட்சியின் பொறுப்புக்களும் கடமைகளும் மூன்றினைக் கூறி ஒன்றினை விளக்குக.

(02+3+5= 10புள்ளிகள்)

**04.**

01. தேசியரசின் மூலக்கூறுகள் நான்கு வகைப்படுகின்றன. அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக.
02. தேசியரசின் பிரதான பண்புகள் 03 தருக.
03. தேசியரசின் தோற்றத்திற்கான காரணிகள் 03 குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(02+3+5= 10புள்ளிகள்)



kalvi.lk

**05.**

01. பாராளுமன்ற அரசாங்க முறை என்றால் என்ன?

02. பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகள் 3 தருக.

03. சனாதிபதி அரசாங்க முறையின் பண்புகள் 3இனைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக.

(02+3+5= 10புள்ளிகள்)

**06.**

01. சமஷ்டியாட்சி (கூட்டாட்சி) என்பதனை வரைவிலக்கப்படுத்துக.

02. சமஷ்டி அரசொன்று வெற்றி பெறுவதற்கான இயல்புகள் 3 தருக.

03. சமஷ்டி அரசொன்றின் பண்புகள் 5 தருக.

(02+3+5= 10புள்ளிகள்)

**07.**

01. மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் 2 தருக?

02. மாகாண சபை ஒன்றிற்கு 1978 அரசியல் யாப்பின் 13ஆவது சீர்திருத்தபடி மூன்று நிரல்களின் பிரகாரம் மூன்று வகையாக வகுக்கப்பட்டுள்ளன. அவை எவை?

03. நகரபிதாவின் அதிகாரங்கள் 05 தருக.

(02+3+5= 10புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page